**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.**
**(தேனி மாவட்டம், வீரபாண்டி காவல் நிலையக் குற்ற எண். 34/2025)**
**R.C.S. No. 386/2025.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. கிருஷ்ணமூர்த்தி. | ஜாதி | |
| தந்தை பெயர் | பாண்டி. | தொழில் | பைனான்சில் வேலை |
| கிராமம் | கோட்டூர் | சமயம் | |
| தாலுக்கா மற்றும் மாவட்டம் | | வயது | 26/2026. |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.07.2026.

**<u>வாக்குமூலம்:–</u>**

நான் தற்போது, கோட்டூரில் குடியிருந்துகொண்டு, பைனான்சில் வேலை செய்து வருகிறேன். கடந்த 03.02.2025 ஆம் தேதி என் அப்பா பாண்டி அதிக வயிற்று வலி காரணமாக அரளி விதையை சாப்பிட்டுவிட்டார். சின்னமனூர் அரசு மருத்துவமனைக்குச் சென்றும், பின்னர் மேல் சிகிச்சைக்காக தேனி, க.விலக்கு அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றபோது, என் அப்பா இறந்துவிட்டதாகத் தெரிவித்துவிட்டார்கள். என் அப்பாவின் இறப்பில் எனக்கு எந்தவித சந்தேகமும் இல்லை. நான் கொடுத்த புகாரின் அடிப்படையில் விசாரணை மேற்கொண்ட புலன் விசாரணை அதிகாரி இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார். அவர் தாக்கல் செய்துள்ள இறுதி அறிக்கைக்கு எனக்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லை. எனது ஆதார் அடையாள அட்டையின் நகலையும் சமர்ப்பிக்கிறேன்.

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு, என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.**

BHARATHA DEVI

Digitally signed by BHARATHA DEVI
Date: 2026.07.10 18:06:27 +0530

**நீதித்துறை நடுவர்,**
**தேனி.**